பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 07 2025 — 12 40
புதன்கிழமை — பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி பிரிட்டன் மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

2. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இருஅவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

3. சுதந்திர போராட்ட வீரர் லோக்மான்ய பாலகங்காதர திலகர் பிறந்தநாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

4. தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

பிரதமர் திரு நரேந்திர மோடி பிரிட்டன் மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கு 4 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

முதற்கட்டமாக பிரிட்டன் தலைநகர் லண்டன் செல்லும் அவர், அந்நாட்டு பிரதமர் திரு **Keir Starmar** மற்றும் அந்நாட்டு அரசர் 3 ஆவது சார்லஸ் ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

பிரதமரின் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, பிரிட்டன் மற்றும் மாலத்தீவு நாடுகளில் அங்குள்ள தொழில் துறையினரை சந்தித்து இந்தியாவில் உள்ள முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும், அரசின் சலுகைகள் குறித்தும் பிரதமர் விரிவாக எடுத்துரைக்கவுள்ளார் என்று கூறினார்..

பிரதமரின் பிரிட்டன் வருகை குறித்து எமது செய்திப் பிரிவுக்கு அங்குள்ள இந்திய ஹை கமிஷனர் திரு விக்ரம் குமார் துரைசாமி அளித்த பேட்டியில், இருநாடுகளுக்கும் பயனுள்ள வகையில் பிரதமரின் பிரிட்டன் பயணம் அமையும் என்று கூறினார்.

இருதரப்பு தாராள வர்த்தக கொள்கை இருநாட்டு பொருளாதாரங்களுக்கும் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தகத்திற்கான ஒருலட்சிய ஆவணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

>><><><><<

பஹல்காம் தீவிரவாத தாக்குதல், பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கக்கோரி மக்களவையில் இன்று காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

முன்னதாக அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, எதிர்க்கட்சி உறுப்பினர்களை அமைதி காக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கேள்வி நேரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அதனை தடையின்றி நடத்த ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதை ஏற்க மறுத்து, தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

அவைத் தலைவர் சில விதிகளை சுட்டிக்காட்டி, அவை நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தினார்.

இருப்பினும் கூச்சல் குழப்பத்திற்கு இடையே ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், கேள்வி நேரத்தில் பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில்வே திட்டங்கள் குறித்த கேள்விகளுக்கு பதிலளித்தார்.

தொடர்ந்து அமளி நீடித்ததால் மக்களவை முதலில் நண்பகல் 12 மணிவரையும் பின்னர் பிற்பகல் 2 மணிவரையும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்டவை குறித்து சில ஒத்திவைப்பு தீர்மானங்களை கொண்டுவந்தனர்.

அவை அனைத்தையும் மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் நிராகரித்தார்.

காங்கிரஸ், த்ரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் 25 ஒத்திவைப்பு தீர்மானங்களை கொண்டு வந்ததாக அவையில் தெரிவித்த திரு ஹரிவன்ஷ், கேள்வி நேரத்தை நடத்த அனுமதிக்குமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களை கேட்டுக்கொண்டார்.

அவர்கள் அதனை ஏற்க மறுத்து தொடர் அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

>><><><><<

சுதந்திர போராட்ட வீரர்கள் லோக்மான்ய பாலகங்காதர திலகர் மற்றும் சந்திரசேகர ஆசாதின் பிறந்தநாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டில் சுதந்திர போராட்ட இயக்கத்தில் பங்கு பெறுமாறு மக்களிடையே எழுச்சியை ஊட்டியவர் திலகர் என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு விஷயங்களில் அறிவாற்றல் மிக்க திலகர், ஏழை எளிய மக்களுக்கு சேவையாற்றுவதையும் கடமையாக கொண்டிருந்தவர் என்று பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

பாலகங்காதர திலகர் மற்றும் சந்திரசேகர ஆசாதின் தியாகங்கள் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு வலுவூட்டியதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் தியாகி சுப்பிரமணிய சிவாவின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதையொட்டி, இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், பாரதியார், வ உ சிதம்பரனார் ஆகியோருடன் இணைந்து ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக வீர முழக்கம் இட்டவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தின் 17 ஆவது தலைமை நீதிபதியாக திரு தர்லோக் சிங் சவுகான் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

ஜார்க்கண்ட் ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்குவார், ஆளுநர் மாளிகையில் புதிய நீதிபதி திரு சவுகானுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன், சட்டப்பேரவை தலைவர் திரு ரவீந்திரநாத் மகத்தோ, எதிர்க்கட்சித் தலைவர் திரு பாபுலால் மராண்டி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குடியரசுத் தலைவரின் பதவி நியமன ஆணையை மாநில தலைமை செயலர் திரு அல்கா திவாரி வாசித்தார்.

மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை புதிய நீதிபதி நியமனத்திற்கான அறிவிப்பை கடந்த 14 ஆம் தேதி வெளியிட்டிருந்தது.

>><><><<

தேசிய அரிவாள் செல் இயக்கத்தின்கீழ் நாடு முழுவதும் 6 கோடி மக்களுக்கு பரிசோதனை நடத்தப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இவர்களில் 2 லட்சத்து 15 ஆயிரம் பேருக்கு நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

>><><><<

தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1927ஆம் ஆண்டு இதேநாளில் **Indian Broadcasting Company** என்ற பெயரில், மும்பை வானொலி நிலையத்தில் இருந்து நாட்டின் முதலாவது வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பானது.

அன்று முதல் வானொலி நிகழ்ச்சிகள் இந்திய மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக மாறியுள்ளது.

இந்நாளையொட்டி பிரசார் பாரதி தலைவர் திரு **Navneet Kumar Sehgal** மற்றும் அதன் தலைமைச் செயல் அதிகாரி திரு கௌரவ் துவிவேதி, ஆகாஷ்வாணி தலைமை இயக்குநர் டாக்டர் பிரக்யா பாலிவால் கௌர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>><><><<

மத்திய அரசின் மக்கள் மருந்தக திட்டம் நாடுமுழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த மருந்தகத்தின் மூலம் குறைந்த விலையில் மருந்துகளை பெற்று பயனடைந்து வருவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

>><><><<

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன்காரணமாக அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரத்து 860 கனஅடி நீர் வெளியேற்றப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

ஜம்மு கஷ்மீர், லடாக், பல்கிஸ்தான் ஆகிய பகுதிகளில் இன்று கன மற்றும் மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. அசாம், மேகாலயா, சத்தீஷ்கர், கொங்கன், கோவா, மத்திய மகாராஷ்டிரா, தெலங்கானா பகுதிகளிலும் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தமான் நிகோபார் தீவுகள், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா, மாகே, கொங்கன், கோவா, லட்சத்தீவுகள், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று பலத்த கடல்காற்று வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>><><><<

ஜம்மு கஷ்மீரில் உள்ள படோரா மலைப் பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட நிலச்சரிவில் இரண்டு பேர் உயிரிழந்தனர். அங்குள்ள ஒரு கூடாரத்தில் 3 பேர் உறங்கி கொண்டிருந்தபோது நிலச்சரிவு ஏற்பட்டு அவர்கள் மண்ணுக்குள் புதைந்ததாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார். உடனடியாக மண் சரிவு அகற்றப்பட்டதாகவும், அங்கு தங்கியிருந்த ஒருவர் காயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். காயமடைந்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது உடல்நிலை சீராக உள்ளதாகவும் எமது ஜம்மு செய்தியாளர் மேலும் மேலும் தெரிவிக்கிறார்.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 8-21, 21-17 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Tomoka Miyazaki**-ஐ வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ராங்கி ரெட்டி - ஷிராக் ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-------------

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **shreyesi Joshi** தங்கப் பதக்கம் வென்றார். தென்கொரியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தஸ்னேஷ்வர் சுரேஷ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. மான்செஸ்டரில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30 க்கு தொடங்குகிறது.

**>> End of News <<**